புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுர் ஆண்டு 2056 • மே 08, 2025 • புரட்சி 25 • முழக்கம் 17 • விலை ரூ.6.00



## ஆண்டுக்கு ஆண்டு எண்ணிக்கை குறைகிறது

# நீட் தேர்வில் தொடரும் ‘கெடுபிடிகள்’

ஒன்றிய ஆட்சியின் தேர்வு நிறுவனம் நடத்தும் கெடுபிடிகளால் தற்கொலைகள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன தேர்வு எழுதுவோரின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது 2021-க்குப் பிறகு 2025 இல் முதல் முறையாக மிக மோசமான அளவுக்கு தேர்வு எழுதுவோர் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்று புள்ளி விவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன இந்த ஆண்டு தேர்வு எழுத விண்ணப்பித்த 25 லட்சம் பேர் மட்டுமே தேர்வு எழுத முன் வந்துள்ளனர்.

●நீட் நுழைவுத்தேர்வில் முறைகேட்டில் ஈடுபட்ட 14 மாணவர்களின் சேர்க்கையை ரத்து செய்ய, தேசிய மருத்துவ ஆணையம் உத்தரவிட்டுள்ளது. மேலும், 42 பேர், மூன்று ஆண்டு தேர்வெழுத தடை விதிக்கப்பட்டுள்ளது.

●எம்.பி.பி.எஸ்., - பி.டி.எஸ்., உள்ளிட்ட இளநிலை மருத்துவப் படிப்புகளில் சேருவதற்காக நீட் நுழைவுத் தேர்வை, தேசிய தேர்வு முகமை நடத்தி வருகிறது. இந்நிலையில், கடந்தாண்டு நடந்த நீட் தேர்வில், வினாத்தாள் கசிந்ததாகப் புகார் எழுந்தது.

●இது தொடர்பான வழக்கை சி.பி.ஐ., விசாரித்து வருகிறது. அதில் குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்ட 14 மாணவர்களின் மருத்துவ கல்லுாரி சேர்க்கையை ரத்து செய்துள்ளதாக, தேசிய மருத்துவ ஆணையம் அறிவித்துள்ளது.

●கடந்த ஆண்டு நீட் தேர்வு முறைகேடு தொடர்பாக 255 எம்பிபிஎஸ் மாணவ, மாணவியர் மீது தேசிய மருத்துவ கமிஷன் நடவடிக்கை எடுத்து உள்ளது.

●கடந்த 2024-ம் ஆண்டு நடைபெற்ற நீட் நுழைவுத் தேர்வின்போது வினாத்தாள் கசிவு, ஆள்மாறாட்டம் உள்ளிட்ட முறைகேடுகள் நடைபெற்றதாக புகார்கள் எழுந்தன. நீட் தேர்வில் முழு மதிப்பெண் பெறுவது கடினம் என்ற சூழலில் கடந்த ஆண்டு தேர்வில் 67 பேர் 720 மதிப்பெண்களை பெற்றது சந்தேகங்களை எழுப்பியது.

●நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் 40 வழக்குகள் தொடரப்பட்டன. "குறிப்பிட்ட சில தேர்வு மையங்களில் மட்டும் முறைகேடுகள் நடைபெற்று உள்ளன" என்று தேசிய தேர்வு முகமை சார்பில் உச்ச நீதிமன்றத்தில் விளக்கம் அளிக்கப்பட்டது.

●இதை ஏற்றுக் கொண்ட உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு, "பீகார் தலைநகர் பாட்னா, ஜார்க்கண்ட் மாநிலத்தின் ஹசாரிபாக் ஆகிய பகுதிகளில் மட்டுமே முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. இதர பகுதிகளில் முறைகேடுகள் நடந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. எனவே நீட் தேர்வை ரத்து செய்ய முடியாது" என்று தீர்ப்பளித்தது

●இந்த சூழலில் கடந்த ஆண்டு நீட் தேர்வு முறைகேட்டில் தொடர்புடைய எம்பிபிஎஸ் மாணவ, மாணவியர் மீது தேசிய மருத்துவ கமிஷன் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

●அவர்கள் 26 பேரும் சம்பந்தப்பட்ட மருத்துவ கல்லூரிகளில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டு உள்ளனர். ஒட்டுமொத்தமாக 255 எம்பிபிஎஸ் மாணவ, மாணவியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

●கடந்த ஆண்டு நீட் தேர்வின்போது முறைகேடுகள் செய்து சிக்கிய 42 மாணவ, மாணவியர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அவர்கள் அடுத்த 3 ஆண்டுகளுக்கு நீட் தேர்வு எழுத தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

● இந்த ஆண்டு அறிவியல் தொடர்பான கேள்வி பிரிவில் 156வது கேள்வியில் கீழ்கண்டவற்றுள், எவை காய்ச்சி வடிக்கப்படாத ஈஸ்ட் மூலம் உற்பத்தி செய்யப்படும் ஆல்கஹால் பானம் என்ற கேள்வி கேட் கப்பட்டு இருந்தது. இதற்கு 4 ஆப்ஷன்கள் வழங்கப்பட்டு இருந்தன. அதில் ஆப்ஷன் 1ல் பிராந்தி, 2ல் பீர், 3ல் ரம், 4ல் விஸ்கி என குறிப் பிடப்பட்டு இருந்தது. இக்கேள்வி மாணவ, மாணவிகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பல மாணவர்கள் இதற்கு சரியான விடை தெரியாமல் குழப்பம் அடைந்தனர். நீட் தேர்வில் போதை தொடர்பாக கேள்வி கேட்கப்பட்டதற்கு பெற்றோர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

●நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மையத்தில், நேற்று 720 மாணவிகள் நீட் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். 420 பேரின் வருகை பயோமெட்ரிக் சிஸ்டத்தில் பதிவு செய்யப்பட்ட போது, சர்வர் பிரச்னை ஏற்பட்டதால் காலதாமதம் ஏற்பட்டது. சர்வர்சரியாகவில்லை என்ற சூழ்நிலையில், மாணவிகளை தேர்வு மையத்திற்குள் பயோமெட்ரிக் இல்லாமலே தேர்வு எழுத அனுமதித்தனர். இதனிடையே முறையான ஏற்பாடுகள் செய்யாத தேசிய தேர்வு முகமையை கண்டித்து, பள்ளிக்கு எதிரில் மாணவிகளின் பெற்றோர்கள் சங்ககிரி சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த மறியலால் திருச்செங்கோடு-சங்ககிரி சாலையில் சுமார் 2 மணி நேரமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனிடையே, பயோமெட்ரிக் சர்வர் சரியானவுடன் அனைத்து மாணவிகளிடமும் பயோமெட்ரிக் பதிவு செய்யப்பட்டது. இதனால் பெற்றோர்கள் நிம்மதியுடன் கலைந்து சென்றனர்.

●ராமநாதபுரம் அரசு பெண்கள் கலை அறிவியல் கல்லூரியில் நேற்று நீட்தேர்வை 360 பேர் எழுதினர். இங்கு கீழக்கரை பகுதியை சேர்ந்த மாணவி ஸ்வஸ்திகா ஹரிணி தேர்வு எழுதும் போது, 45ம் எண் வினாத் தாளை வழங்குவதற்கு பதிலாக, 46ம் எண் வினாத்தாள் வழங்கப்பட்டது. அரை மணிநேரம் கழித்து மீண்டும் வினாத்தாளை மாற்றிக் கொடுத்தனர். இதனால் மாணவியும், மாணவனும் சரியாக தேர்வு எழுத முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் கண்ணீர் மல்க ஸ்வஸ்திகா ஹரிணி தேர்வு மையத்தை விட்டு வெளியே வந்தார்.

●சேலம் அரசு கலைக்கல்லூரி தேர்வு மையத்தில் 480 பேர் நீட் தேர்வு எழுதினர். தர்மபுரி மாவட்டம் நரிப்பள்ளியைச் சேர்ந்த மாணவன் சிபுபாரத் என்பவர் மையத்திற்கு வந்த நிலையில், தகவல் பலகையில் அவரின் பெயர் மற்றும் தேர்வெண் இடம்பெறவில்லை. அங்கு இருந்த அதிகாரிகள் ஹால் டிக்கெட்டை வாங்கி பார்த்தபோது, அதில் அரசு கலைக் கல்லூரி, சேலம் பைபாஸ் மெயின் ரோடு, கலெக்ட்ரேட் என இருந்தது. இதையடுத்து சிபுபாரத் அவசரம், அவசரமாக தர்மபுரிக்கு புறப்பட்டுச் சென்றார். இதேபோல் கிருஷ்ணகிரியைச் சேர்ந்த தமிழரசி என்ற மாணவி உள்பட 5க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள், தர்மபுரிக்கு பதில் சேலத்திற்கு வந்தனர். பின்னர், அவர்கள் விபரம் தெரிந்து அவசரம், அவசரமாக வாடகை கார், கால்டாக்ஸி மூலம் தர்மபுரிக்கு சென்றனர்.

●நீட் வினாத்தாளை ரூ.40 லட்சத்திற்கு தருவதாக கூறி மோசடியில் ஈடுபட்ட கும்பல் ராஜஸ்தானில் சிக்கியது.

●இதேபோல ஆள் மாறாட்டம் செய்தும் பல்வேறு மருத்துவ கல்லூரியில் இடம் வாங்கி தர மாணவர்களிடம் தலா ரூ 20 லட்சம் வாங்கிய நான்கு பேரை ஒடிசா காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

●கேரள மாநிலம் பத்தினம்திட்டா மையத்தில் மற்றொரு மாணவரின் பெயரில் போலியான தேர்வு கூட அனுமதி சீட்டுடன் ஒரு மணி நேரம் தேர்வு எழுதிய பின் மாணவர் ஒருவர் அதிகாரிகளிடம் சிக்கினார். முறைகேட்டில் ஈடுபட்டவரிடம் விசாரித்த போது பயிற்சி மையமே போலி அனுமதி சீட்டை தந்ததாக கூறியுள்ளார்.

# கருத்துச் செறிவுடன் நடந்த சென்னை பயிலரங்கம்!





தோழர் பத்ரி நாராயணன் நினைவு நாளில்"கற்போம்! களம் காண்போம்!" என்ற தலைப்பில் 30/04/25 அன்று சென்னை இராயப்பேட்டை விஜய் திருமண மண்டபத்தில், கழக இளைஞரணியின் மாவட்ட அமைப்பாளர் ப.அருண் தலைமையில் பயிலரங்கம் நடைபெற்றது. பயிலரங்க ஏற்பாடுகளை கழக இளைஞரணி தோழர்கள் நேர்த்தியாக செய்திருந்தனர். பயிற்சி பெற்ற 55 பேரில் 15 க்கு மேற்பட்டவர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திராவிட இயக்க வரலாற்றில் இடம்பெற்ற தலைவர்களின் படங்களும் அவர்களைப் பற்றிய குறிப்புகளும் அரங்கில் பார்வைக்கு வைக்கப்பட்டு இருந்தன. கழகத்தலைவர் தனது தொடக்க உரையில் சுயமரியாதை இயக்கத்துக்கும் திராவிட இயக்கத்துக்கும் உள்ள பண்பு ரீதியான வேறுபாடுகளை சுட்டிக்காட்டி இயக்க வரலாறுகளை இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்ல வேண்டிய தேவையை வற்புறுத்தினார்.

நிறைவுரை ஆற்றிய விடுதலை இராசேந்திரன் கழகத் தோழர்கள் எழுப்பிய வினாக்களுக்கு விளக்கமான விடையளித்தார். கருத்துரையாற்றிய அனைவருக்கும் கழக வெளியீடுகள் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டன.

"கொள்கை தரும் இன்ப வாழ்வு!" எனும் தலைப்பில் மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, "கழகமாவோம்! களம் காண்போம்!!" எனும் தலைப்பில் நிமிர்வோம் வாசகர் வட்ட அமைப்பாளர் ர.பிரகாசு, "கைபர் போலன் முதல் கவுதம புத்தர் வரை" எனும் தலைப்பில் கழகப் பேச்சாளர் திருப்பூர் மகிழவன்,"சீரழிக்கும் பாஜக! சீர்திருத்தும் தமிழ்நாடு!!" எனும் தலைப்பில் திமுக மாநில செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, "சமூக வலைத்தளங்களில் ஜாதியவாதமும் மதவாதமும்" எனும் தலைப்பில் ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி, "ஜாதி ஒழிப்பில் அய்யாவும் அண்ணலும்" எனும் தலைப்பில் திவிக இளைஞரணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெயபிரகாஷ் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

தோழர் வீரமணி குழுவினர் பாடல்களை பாடினர். திணைநில வாசிகள், "அசுர கீதம்" நாடகத்தை நடத்தினர். இடஒதுக்கீடு குறித்த திமுக இளைஞரணியினர் உருவாக்கிய காணொளியும், கொளத்தூர் கபிலன் ஸ்டுடியோ இளவரசன் மற்றும் ர.பிரகாசு எழுதி உருவாக்கிய கழக வரலாற்றை விளக்கும் காணொளியும் திரையிடப்பட்டது. தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, இப்பயிலரங்கை தொகுத்து வழங்கினார்.

70-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர். கழகத்தில் புகழேந்தி சிரிலேகா இணையர்கள் குடும்பத்தோடு கழகத்தில் இணைந்தனர். ஹர்சா என்ற இளைஞர் கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**தொடர்ச்சி 4-வது பக்கத்தில்**



**தலையங்கம்**

## ஜாதிவாரி கணக்கெடுப்பு நடக்குமா?

ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதற்கு ஒன்றிய அமைச்சரவை ஏன் திடீர் முடிவுக்கு வந்தது?

இதற்குப் பின்னால் பீகார் சட்டமன்றத் தேர்தல் எனும் கட்சி அரசியல் அடங்கி இருக்கிறது. பிற்படுத்தப்பட்டோர் வாக்குகளைக் குறிவைப்பதே இந்த திடீர் அறிவிப்பின் நோக்கம். காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, திமுக மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகள் இந்த சமூகநீதி கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தி வந்தன. தமிழ்நாடு சட்டமன்றத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாடு முழுமைக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒருமித்த குரலாக இந்த கோரிக்கை உருவாகியுள்ளது.

ஒன்றிய பாஜக ஆட்சி இதைக் கடுமையாக எதிர்த்து வந்தது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது மோடி கடுமையாக எதிர்த்துப் பேசினார். ஜாதி கணக்கீடு கேட்பவர்கள் பிரிவினைவாதிகள் என்றும் ‘அர்பன் நக்சல்கள்’ என்றும் தடித்த வார்த்தைகளைப் பயன்படுத்தினார். நாடாளுமன்றத்தில் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதில் அளித்த உள்துறை இணை அமைச்சர் நித்தியானந் ராய் மக்கள் தொகை கணக்கெடுப்புடன் ஜாதி கணக்கெடுப்புகள் எடுக்கும் திட்டம் அரசிடம் இல்லை என்றும் இது அரசின் உறுதியான கொள்கை (Matter of policy) என்றும் கூறினார்.

இப்போது இந்த திடீர் அறிவிப்பை வெளியிட்ட ஒன்றிய ஆட்சி, எப்போது செயல்படுத்த இருக்கிறது என்ற காலக்கெடுவை அறிவிக்கவில்லை. இதற்கு தேவையான சுமார் ரூபாய் 25000 கோடி நிதியையும் ஒதுக்கீடு செய்யவில்லை. நிர்வாக கட்டமைப்புகளையும் உருவாக்கவில்லை.

1871-ல் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை தொடங்கியது. அப்போது ஜாதிகளின் கணக்கெடுப்பையும் இணைத்தது. 1931ம் ஆண்டு வரை மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் ஜாதி கணக்கெடுப்பும் இணைந்து நடத்தப்பட்டது. இதன் வழியாக 4737 ஜாதிகள் மற்றும் துணை ஜாதிகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. அதன் பிறகு 1941-ல் ஜாதி கணக்கெடுப்பு நடந்தது. அப்போது உலகப் போர் நடந்த காலம், எனவே கணக்கெடுப்பு முடிவுகள் வெளியிடப்படவில்லை. ‘சுதந்திர இந்தியா’ மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஜாதி பற்றிய தகவல்களை எடுக்கத் தேவையில்லை என்று முடிவு செய்தது. அதிகார அரசியலை தங்கள் பிடிக்குள் முடக்கி வைத்திருந்த பார்ப்பன அதிகார வர்க்கத்தின் திட்டமிட்ட சதி இது.

அரசியல் நிர்ணய சபையின் தலைவராக இருந்த அம்பேத்கர் சமூக நீதிப் பார்வையில் இந்த ஜாதி கணக்கெடுப்புகள் கட்டாயம் தேவை என்ற முடிவுக்கு வந்தார். பட்டியலின மற்றும் பழங்குடிப் பிரிவினருக்கான இட ஒதுக்கீடு அரசியல் சட்டத்தில் இணைக்கப்பட்டதன் காரணமாக இந்த மக்களின் கணக்கெடுப்பை நடத்த வேண்டிய கட்டாயத்தை அவர் உருவாக்கினார். அதன் காரணமாக தொடர்ந்து எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகளில் பட்டியலின மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை எண்ணிக்கை மட்டும் கணக்கிடப்பட்டன.

பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கான கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்றும் அம்பேத்கர் தொடர்ந்து வலியுறுத்தினார். அதற்கான கூட்டத்தில் 340 பிரிவு ஒன்றையும் உருவாக்கினார். அரை நூற்றாண்டுக்குப் பிறகு மண்டல் ஆணையம் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இட ஒதுக்கீட்டை பரிந்துரைத்த போது 1931 ஆம் ஆண்டு எடுத்த கணக்கெடுப்பையே அடிப்படையாகக் கொள்ளப்பட்டது.

2011-ஆம் ஆண்டு ஒன்றிய ஆட்சியின் ஊரக வளர்ச்சித் துறை நாடு தழுவிய ஜாதிகளின் எண்ணிக்கையை சேகரித்தது, இது சர்வே மட்டும் தான். ஜாதிகளின் சமூக பொருளாதார நிலை குறித்து ஆய்வு அல்ல. (Socio-Economic and caste Census(SECC). மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தும் நோக்கத்துக்காக இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன் ஒரு பகுதி மட்டும் 2016ல் வெளியிடப்பட்டது. ஜாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பின் விவரங்கள் வெளியிடப்படவில்லை. கணக்கெடுப்பில் நடந்த குளறுபடிகளே இதற்குக் காரணம்.

பிற்படுத்தப்பட்ட ஜாதிகளின் பெயர்ப் பட்டியல்களை ஒன்றிய அரசு தயாரித்து அதை மக்களிடம் காட்டி எந்த ஜாதி பிரிவின் கீழ் நீங்கள் வருகிறீர்கள் என்ற கேள்வியை எழுப்பி இருக்க வேண்டும். அப்படி ஒன்றிய அரசு பட்டியல் ஏதும் தயாரிக்காமல் மக்களிடமே தங்கள் ஜாதிப் பெயரைக் கூறுமாறு கேட்டதால் ஒவ்வொரு ஜாதியினரும் தங்களது ஜாதிகளைக் கூறினார்கள். அதன்படி இந்தியாவில் 46 லட்சம் ஜாதிகள் இந்த பட்டியலில் பதிவாகிவிட்டன.

இந்தியாவில் 2011 இல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதிலும் ஜாதி வாரி கணக்கெடுப்பு சேர்க்கப்படவில்லை அரசியல் சட்டத்தின் அழுத்தம் காரணமாக பட்டியலின பிரிவினர் எண்ணிக்கை மட்டுமே எடுக்கப்பட்டது. அடுத்த 10 ஆண்டுகளான 2021 இல் எடுக்க வேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒன்றிய பாஜக ஆட்சி தள்ளிப் போட்டது. கொரோனா தொற்று பரவி இருந்தது அதற்கு ஒரு காரணமாக கூறப்பட்டது. கொரோனா தொற்று முடிந்த நிலையில் இதற்கான முயற்சிகள் எதையும் ஒன்றிய ஆட்சி எடுக்கவில்லை.

இந்த நிலையில் பீகாரிலும் தெலுங்கானாவிலும் ஜாதி வாரி கணக்கெடுப்பு மட்டும் நடத்தப்பட்டது. இது கணக்கெடுப்பு தானே(Survey) தவிர ஜாதிகளின் சமூக வரலாற்றுப் பின்னணியை கொண்ட ‘சென்செக்ஸ்’ அறிக்கை அல்ல.

கர்நாடக மாநிலத்தில் 2015-ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த சீதாராமையா இதே போல் கணக்கெடுப்பையும் நடத்தினார். 10 ஆண்டுகளுக்கு பிறகு தான் அந்த கணக்கெடுப்பு வெளியிடப்பட்டது. இந்நிலையில் உச்சநீதிமன்றம் பீகார் அரசு எடுத்த கணக்கெடுப்பை நிராகரித்துவிட்டது.

இது தொடர்பாக அடிப்படையான ஒரு உண்மையை பரிசீலிக்க வேண்டும். இந்து மதத்தில் மட்டும் தான் ஜாதி இருக்கிறது. இந்து சமூகம் ஒரு ஜாதிய சமூகமாக இருக்கிற காரணத்தினால் தான் ஜாதி கணக்கெடுப்பும் தேவைப்படுகிறது. அதிலும் ஜாதி அடக்குமுறைகளுக்கு வழிவகுக்கும் ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டிருப்பதால் தான் ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு நீதி வழங்குவதற்காக இந்த கணக்கெடுப்பு தேவைப்படுகிறது.

இந்து சமூகம் சமத்துவமான சமூகம் அல்ல அது பாகுபாடுகளை நிலை நிறுத்துகிற ஒரு சமூகம் என்று பெரியார் இயக்கம், திராவிட இயக்கம் தொடர்ந்து கூறி வருகிறது. அதன் காரணமாக இந்த பாகுபாடுகளுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் காரணமான பார்ப்பனியத்தை இந்து மத சாஸ்திர சம்பிரதாயங்களை, பழக்க வழக்கங்களை பெரியார் இயக்கம் கேள்விக்கு உட்படுத்தியது. இதற்காக இந்து மதத்தை புண்படுத்துகிறார்கள் என்று குற்றம் சாட்டியவர்கள் இவர்கள்தான்.

இப்போது அவர்களே "ஆம் இந்து மதத்தில் பாகுபாடு இருக்கிறது" என்பதை ஒப்புக்கொண்டு ஜாதி வாரி கணக்கெடுப்புக்கு முன் வந்திருக்கிறார்கள் என்பதை நாம் குறிப்பிட்டாக வேண்டும். சனாதன தர்மம் தான் உயர்ந்தது. இதில் வர்ண பேதத்திற்கு இடம் இல்லை என்று கூறி வந்தவர்கள் சனாதன தர்மம் என்பது ஜாதிகளுக்கு உட்பட்டது தான் என்ற கருத்தையும் இப்போது ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள். ஜாதி ஒழிப்பு சமூகநீதி என்ற அடித்தளத்தின்மீது தான்இந்து சமூக ஒற்றுமையை உருவாக்க முடியும் அதற்கு தடையாக நிற்கும் சானதனமும் பார்ப்பனியமும் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.

## திராவிட மாடல் ஆட்சியும் ஆல்பர்ட்டா மாகாணமும்!

கனடாவில் நடந்து முடிந்த தேர்தலில் நான்காவது முறையாக லிபரல் கட்சி வெற்றி பெற்றுள்ளது. கனடாவில் கூட்டாட்சி அரசியல் அமைப்பு என்ற நடைமுறை இருக்கிறது. ஆல்பர்ட்டா என்ற மாநிலத்தில் கன்சர்வேட்டிவ் கட்சி தான் மக்கள் செல்வாக்கோடு ஆட்சியில் இருக்கிறது.

கனடா கூட்டாட்சி ஆட்சியை தொடர்ந்து புறக்கணித்து வருகிறது என்று ஆல்பர்ட்டா மாநில ஆட்சி குற்றம் சாட்சி வருகிறது. அதிக வரி செலுத்தும் மாநிலமாகவும், வளர்ச்சி திட்டங்களில் முதலிடம் பெற்ற மாநிலம் ஆல்பர்ட்டா தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதை எதிர்த்து மாநில மக்களும் மாநில ஆட்சியும் போர்க்கொடி உயர்த்தி உள்ளனர்.

கன்சர் வேட்டிவ் வெற்றி பெற்ற அடுத்த நாளே ஆல்பர்ட்டா சட்டமன்றம் கூடி மசோதா ஒன்றை நிறைவேற்றி உள்ளது. கனடா கூட்டாட்சி அமைப்பிலிருந்து ஆல்பர்ட்டா தனியாக பிரிந்து செல்வது குறித்து வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று இந்த மசோதா கூறுகிறது. ஆல்பர்டடா மாநில பிரிமியர் ஸ்மித் மார்கார்னி இவ்வாறு கூறியுள்ளார்: ஆல்பர்ட்டா மக்கள் பெருமைமிக்க கனடியர்கள் நாங்கள் இந்த நாடு ஒற்றுமையாகவும் பலமாகவும் இருக்கவே விரும்புகிறோம். எங்கள் தொழில்கள் அச்சுறுத்தப்படுவதையும், எங்கள் நிலங்கள் பறிக்கப்படுவதையும் பொறுத்துக் கொள்ள மாட்டோம். வெற்று வார்த்தைகள் எங்களுக்குத் தேவையில்லை அர்த்தமுள்ள செயல்பாடுகளே தேவை என்று அவர் அறிவித்துள்ளார். தொடர்ந்து ஆல்பர்ட்டா மக்களை அடுத்த கட்ட போராட்டங்களை நோக்கி நகர்த்துவதற்கு தயார் செய்ய மாநில அரசு முடிவு செய்து இருக்கிறது.

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய ஆட்சிக்கு எதிராக திராவிட மாடல் ஆட்சி நடத்தும் உரிமைப் போராட்டம் தான், ஆல்பர்ட்டா மக்களுக்கான உரிமைப் போராட்டத்தினை அந்த மாநிலமும் நடத்திக் கொண்டு இருக்கிறது. இந்திய அரசியலமைப்புக்கு உட்பட்ட மாநில சுயாட்சியை திராவிட மாடல் ஆட்சி கோருகிறது. ஆல்பர்ட்டாவும் அதேபோல் தங்கள் மாநிலத்தில் வாக்கெடுப்பு நடத்தி கனடாவோடு இணைந்து இருக்க வேண்டுமா, வேண்டாமா என்ற கோரிக்கையை சட்டத்தின் வாயிலாக எழுப்பி இருக்கிறது.

## ஜாதிக் குறியீடுகளை ஒழிப்பதும் ஜாதி ஒழிப்புதான்!

கடவுள் ஜாதி மதத்தைக் கடுமையாக எதிர்த்த புரட்சிக் கவிஞருக்கு தமிழ்நாடு முதல்வர் அரசு விழா அறிவித்ததோடு காலனி என்ற சொல்லும் அரசு ஆவணங்களில் இருந்து நீக்கப்படும் என்று அறிவிப்பையும் வெளியிட்டு இருக்கிறார்.

திராவிட மாடல் ஆட்சியின் கொள்கைப் பார்வையாகவே இதைக் கருத வேண்டும். இதே போல் நீதிக் கட்சி ஆட்சி ஆணைகளில் குறிப்பிடப்பட்டு வந்த "பஞ்சமன், பறையன்" என்ற வார்த்தைகளை நீக்கி ஆதிதிராவிடர் என்று அழைக்க வேண்டும் என்று உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

எம்ஜிஆர் முதல்வராக இருந்த போது தெருக்களில் உள்ள ஜாதிப் பெயரை நீக்க ஆணையிட்டார். இதிலும் சிலர் விமர்சனம் செய்கிறார்கள், ‘காலனி’ என்ற பெயரை நீக்கி விட்டால் ஜாதி ஒழிந்து விடுமா என்று கேட்கிறார்கள்.

தனது பெயருக்குப் பின்னால் உள்ள ஜாதிப் பட்டத்தை பெரியார் ஒழித்தார் ஜாதிப் பெயரை போட வேண்டாம் என்ற ஒரு இயக்கம் தமிழ்நாட்டில் நடந்தது.

இப்போது ஜாதிச் சங்க தலைவர்கள் கூட தங்கள் பெயருக்குப் பின்னால் ஜாதிப் பெயரை போடுவதில்லை ஜாதி ஒழிப்பில், ஜாதிக் குறியீடுகளை ஒழிப்பதும் ஒரு முன்னெடுப்பு தான்.

ஜாதி ஒழிப்புக்கான பல்வேறு போராட்ட வடிவங்களில் அதன் அடையாளங்களை அழிக்கின்ற போராட்டங்களும் இணைந்து நிற்கின்றன. ‘அரிஜன்’ என்ற வார்த்தையை காந்தியார் பயன்படுத்திய போது அம்பேத்கர் அந்த அவமானச் சொல்லை கடுமையாக எதிர்த்தார். அதற்காக "வார்த்தையை மாற்றி விட்டால் ஜாதி ஒழிந்து விடுமா?" என்று கேட்பது அபத்தம். ஜாதியத்திற்கு கருத்தியலை வழங்கி அதை உயிருடன் பாதுகாக்க துடித்துக் கொண்டிருப்பது பார்ப்பனியம்.

அந்தப் பார்ப்பனிய கருத்தியல் கட்டமைத்த மதிப்பீடுகளை தான் பார்ப்பனர் அல்லாத ஜாதியவாதிகள் தங்களின் மதிப்பீடுகளாகக் கருதி ஜாதியவாதிகளாக போலிப் பெருமை கொள்கிறார்கள்.

இந்த ஜாதிய மனநிலையையும் செயல்பாடுகளையும் எதிர்க்கும் போது பார்ப்பனியக் கருத்திலையும் இணைத்து எதிர்க்க வேண்டும். பார்ப்பனியத்தை துண்டித்து விட்டு ஜாதி எதிர்ப்பை மட்டும் பேசுவது அம்பேத்கரையும் மறுப்பதாகும்.

**விடுதலை இராசேந்திரன்**
**பொதுச்செயலாளர்**
*01.05.2025*

## "பெண் ஏன் அடிமையானாள்" என்ற பெரியார் நூலை படித்தால்

# பெண்களுக்கு எதிரான தடைகளை உடைக்க முடியும்!

*பெரியாரின் கருத்துக்களை பெண்கள் படிக்க வேண்டும் பெண் ஏன் அடிமையானாள் நூலை படித்தால் எந்த தடைகளையும் துணிவு தமக்கு கிடைக்கும் என்று திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் 28.04.2025 நடந்த சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழாவில் கனிமொழி எம்பி பேசினார்.* **கடந்த வார தொடர்ச்சி....**

கவர்னர் தேவையில்லை என்று பலகாலமாக திராவிட இயக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆட்டுக்கு தாடி எதற்கு, நாட்டுக்கு கவர்னர் எதற்கு என்று நாம் கேட்டோம். இப்போது சுப்ரீம் கோர்ட்டையே கேட்க வைத்த இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் மாறியிருக்கிறது.

அதேபோல நமது மொழியை நம்மிடமிருந்து பறித்துவிட வேண்டும். மொழியின் வழியாகத்தான் நமக்கு செய்திகள் வருகிறது. ஒவ்வொரு இனமும் தன்னுடைய சரித்திரத்தை புத்தகங்களாக மட்டுமே அடுத்த தலைமுறைக்குக் கொண்டு போய் சேர்ப்பதில்லை. கதைகளாக வீடுகளிலே பேசக் கூடிய உரையாடல்களாக மாற வேண்டும்.

யூதர்களை எடுத்துக் கொள்ளுங்கள்... ஜெர்மனியில் அவர்கள் நடத்தப்பட்ட விதம், அவர்கள் கொல்லப்பட்ட வரலாற்றை தங்களுடைய குழந்தைகளுக்கு இன்றுவரை தினமும் கதைகளாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.



அதனால்தான் இன்று உலகத்தையே ஆளக் கூடிய இடத்தில் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள்:. நாம் அதுபோல் சொல்லிக் கொண்டிருக்கிறோமா? அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று ஐயா சுபவீ அவர்கள் திராவிடப் பள்ளியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நான் மகளிரணி நிர்வாகிகளுக்கு ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். அந்த பள்ளியிலே தயவு செய்து நீங்களும் பதிவு செய்துகொள்ளுங்கள். வரலாற்றை நாமும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைக்கு சிலிகான் வேலியிலும் கனடாவிலும் அமர்ந்துகொண்டு, பள்ளிக் கூடங்களில் எதற்காக சாதி சர்டிபிகேட் என கேட்கிறார்கள். அதனால்தான் சாதி வளர்கிறது என்று சொல்லக் கூடிய ஒருதலைமுறையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஏனென்றால் அங்கே வந்து உட்கார வாங்கிய அடியெல்லாம் உனக்குத் தெரியாது. தமிழ்நாட்டுக்கு திராவிட இயக்கம் என்ன செய்தது என்று கேட்கும் இளைஞர்களுக்கு அந்த செய்திகளை சொல்லாமல் விட்டது நாம் செய்த தவறு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் மகாபாரதம், ராமாயணம் கதைகளைச் சொல்கிறோம். கதைகளை சொல்லுங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் உங்கள் வரலாற்றைச் சொல்லுங்கள். எத்தனை அடிகள் வாங்கினோம். உரிமைகளை இழந்தோம், எப்படி போராடிப் பெற்றோம் என்பதை உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லி வளருங்கள்.

இல்லையென்றால் ஆஸ்திரேலியாவிலும் வெளிநாடுகளிலும் போய் உட்கார்ந்துகொண்டு அவர்கள் ஜாதி மாநாடுகளை நடத்திக் கொண்டிருப்பார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. என்னுடைய ஜாதியில் பெண்ணைத் தேட வேண்டும் என்று அங்கிருந்து இங்கே பயணம் வந்துகொண்டிருப்பார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அதனால் நாம் வந்த வழியை வரலாற்றை நம் பிள்ளைகளுக்கு சொல்லித் தர வேண்டும். அப்படி சொல்லித் தந்தால்தான் இன்றுநாம் பெற்றிருக்கும் உரிமைகளை எதிர்காலத்தில் நாம் தக்க வைக்க முடியும்.

இந்தியாவின் வொர்க் ஃபோர்சில் 42% பெண்கள் இருக்கிறோம் என்று பெருமையோடு பதிவுசெய்யும் அதே நேரம்., இந்த் நிலையை அடைய தந்தை பெரியார் போல பேரறிஞர் அண்ணா போல கலைஞர் போல, நமது தளபதி போல தலைவர்கள் உழைத்திருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பெண்களின் போராட்டம் முடிந்துவிட்டது என்று யாரும் நினைத்துவிடக் கூடாது. சுயமரியாதை இயக்கம் பற்றி எனக்கு நம்பிக்கை இருக்கிறது, சுயமரியாதை பற்றி எனக்கு விழிப்புணர்வு இருக்கிறது. அக்கறை இருக்கிறது என்று சொல்லக்கூடிய எந்த ஒரு ஆணும் பெண்ணும்.. பெண் விடுதலையை மறுக்கக் கூடியவர்களாக பெண்ணை மதிக்காதவர்களாக பெண்ணுக்கும் ஆணுக்கும் சமமான தளம் வேண்டும் என்று நினைக்காதவர்களாக, இருந்தால் அவர்கள் சுய மரியாதைக் காரர்களாக இருக்க முடியாது. எப்படி இருக்க முடியும்?

பாதி சுயமரியாதையை ஏற்க முடியும், மீதி ஏற்க முடியாது என்றால் நீ சுயமரியாதைக்காரனாக இருக்க முடியாது.

### போலித் தனம் கூடாது!

ஒரு பெண்ணை இழிவுபடுத்தக் கூடியவன் ஒரு பெண்ணை தனிப்பட்ட முறையிலே கிண்டலாக கேலி பேசி மேடையிலே இழிவுபடுத்தக் கூடிய யாரும் சுயமரியதைக் காரர்களாக பெரியார் வழியிலே வந்தவர்களாக இருக்க முடியாது. பெண்ணுக்கு ஏன் இந்த வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேள்வி கேட்கக் கூடியவர்கள் யாரும் சுய மரியாதைக் காரர்களாக இருக்க முடியாது.

அதேநேரத்திலே ஒரு பெண் எனக்கான உரிமைகள் வேண்டும் என்று கேட்கக் கூடிய பெண், ஜாதியை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொன்னால், அவளுக்கும் அதற்கான எந்த தகுதியும் அருகதையும் கிடையாது.

ஏனென்றால் உரிமை என்று சொல்லும்போது சுயமரியாதை என்று சொல்லும்போது எல்லாருக்குமான ஒன்றாகத்தான் அது இருக்க முடியும். பாதிப் பாதியாக பிரித்து இதெல்லாம் எனக்கு வேண்டும் என்று சொல்லி வாங்கிக் கொள்ளக் கூடிய சுயமரியாதை முழுமையான சுயமரியாதையாக உண்மையான சுயமரியாதையாக இருக்க முடியாது. அது போலித் தனத்தை தவிர வேறு எதுவும் இல்லை.

நாம் போராடிப் போராடிப் பெற்றிருக்கக் கூடிய இந்த நிலை, தமிழ்நாட்டுக்காரர்களுக்கும் பிறருக்கும் உள்ள வித்தியாசம் என்ன? பெயருக்குப் பின்னாடி ஜாதிப் பெயர் இல்லாததுதான் தமிழ்நாட்டின் அடையாளம்.

வேறு எந்த மாநிலத்திலும் இதைப் பார்க்க முடியாது. எவ்வளவோ படித்து முன்னேறிய மாநிலம் என்று சொல்லக் கூடிய மாநிலங்கள் கூட ஜாதிப் பெயரை இன்னமும் விடவில்லை. அந்த பெருமை அவர்களை இன்னும் விடவில்லை.

ஆனால் தமிழ்நாட்டில் இருப்பவர்களை பெயரைப் பார்த்தாலேதெரியும். பெயருக்குப் பின்னால் வாலே இருக்காது. ஆனால் அந்த வால் சில தவறான அரசியலால் அதற்கு நாம் கொடுக்கக் கூடிய சின்னச் சின்ன வாய்ப்புகளால், மறுபடியும் இங்கே தலை தூக்க ஆரம்பித்திருக்கிறது என்பதையும் நாம் இங்கே புரிந்துகொள்ள வேண்டும்.

அதை வெட்ட வேண்டும் என்று நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

### மிகப் பெரிய கேள்விக் குறியாக மாறும்!

அதேபோல மதக் காழ்ப்புகள், மத துவேஷங்கள் என்ற போர்வையில் ஒருவர் தாக்கப்படுகிறார் சிலர் உயிரிழக்கிறார்கள் என்றால் அதைச் சுற்றி ஒரு கதையைப் பின்னி அதை மக்களிடம் கொண்டு சேர்க்கக் கூடியவர்களிடம்தான் இன்று இந்திய நாட்டின் ஆட்சி இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஒவ்வொரு மசோதாவிலும் மக்களைப் பிளவுபடுத்தக் கூடிய மாநில உரிமைகளை பறிக்கக் கூடிய ஆட்சிதான் பாஜக ஆட்சி.' அவர்கள் இந்த மண்ணிலே பொறுப்பிலே இருக்கும் வாய்ப்பு தொடரும் என்றால் நாம் கட்டமைத்திருக்கும் இந்த நாடு ஒரு மிகப்பெரிய கேள்விக் குறியாக மாறும்.

அவர்கள் ஊடுருவாமல் தமிழ்நாட்டை பாதுகாக்க வேண்டிய கடமை கடப்பாடு நமக்கு இருக்கிறது. அதைத் தாண்டி இந்த நாட்டையும் பாதுக்காக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

நமக்கு எதிர்காலத்தில் இருக்கும் சவால்கள் என்ன என்பதை புரிந்து கொள்ளும் நிலையில் கூட பல மனிதர்கள் இல்லை.

மனித இனத்தின் வளர்ச்சி, தொழில் வளர்ச்சியை நாம் திரும்பிப் பார்த்தோம் என்றால்... விவசாயிகளாக இருந்தோம், அதன் பின் தொழில் புரட்சி, அதன் பின் டெக்னாலஜி புரட்சி... இன்று ஆர்ட்டிபிசியல் இன்டெலிஜன்ஸ் புரட்சி உனக்கு தெரிந்த எல்லாவற்றையும் ஆர்ட்டிபிசியல் இண்டெலிஜன்ஸ் செய்யும் உன் வேலையைப் பாரு என்ற நிலையில், அந்த வேலை என்ன என்பதை கூட புரிந்துகொள்ள முடியாமல் மனித இனம் நின்று கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில் இந்தியைப் படி ,அதைப் படி இதைப் படி என்று திணித்தால் இது கொஞ்சமாவது அறிவியலுக்கு ஒத்துவரும்படி இருக்கிறதா என்று சிந்திக்க வேண்டும். தொழில் நுட்பத்தை சொல்லிக் கொடுக்காமல் இந்தியை படி என்று சொல்லியிருந்தால் நம் தமிழ் பிள்ளைகள் இன்று உலகத்தின் பல நாடுகளில் வேலைகளில் இருக்க முடியுமா என்று சிந்திக்க வேண்டும்.

இன்று உலகம் மிகப்பெரிய மாற்றத்தின் வாசலிலே நின்று கொண்டிருக்கிறது. நம் பிள்ளைகள் எந்த பாடத்திட்டத்திலே சேர்த்து என்ன பயிற்சியை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்ற முக்கியமான கேள்விகள் நம் முன்னே நின்றுகொண்டிருக்கும் நிலையில்... 100 வருடம் முன்பு நாம் போட்ட ஜாதிச் சண்டையை இன்றும் போடு போடு என்று சொல்கிறார்களே அவர்களை இந்த மண்ணில் இருந்து ஓட ஓட விரட்டப்பட வேண்டும்.

அதுதான் நம்முடைய எதிர்காலத்தின் வளர்ச்சி. அதை மடைமாற்றுவதற்கு மொழியை கற்றுக் கொள், அதை மடை மாற்றுவதற்கு மதத்தைக் கொண்டு வந்து திணித்து பெண்கள் இளைஞர்கள் முன்னேற்றத்தில் தடைக்கற்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தொடர்ந்து கேள்வி கேட்டால் பெண்கள் அடங்கிவிடுவார்கள் என்று சிலர் நினைக்கிறார்கள். அது நடக்காது. எந்த கேள்விக்கும் நம்மால் பதில் சொல்ல முடியும், அதற்காக பெரியாரை படிக்க வேண்டும். ஏன் பெண் அடிமையானாள் என்ற புத்தகத்தை படித்தால் யார் தடுத்தாலும் நிற்க மாட்டோம். உடைத்துக் கொண்டு போய்க் கொண்டே இருப்போம்.

இதுபோன்ற சுயமரியாதை மாநாடு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு சிற்றூரிலும் ஒவ்வொரு பகுதியிலும் நடத்தப்பட வேண்டும். நம்முடைய வலியை நம்முடைய போராட்ட உரிமை சரித்திரத்தை ஒவ்வொரு நாளும் எடுத்துச் சொல்வோம். கதைகளாக உரையாடல்களாக எடுத்துச் சொல்வோம்.

இனி நம் உரிமையை யாரும் பறித்துவிட முடியாத அரணாக திராவிட இயக்கம் திகழும். இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

***(நிறைவு)***

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சனாதன எதிர்ப்புக்கு அடித்தளம் அமைத்தது சுயமரியாதை இயக்கமே! பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் பேச்சு




தென்காசி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 03.05.2025 சனிக்கிழமை மாலை 06.00 மணிக்கு திராவிடம் - பெரியார் யாருக்கு எதிரி? என்ற தலைப்பில் கீழப்பாவூர் சென்ட்ரல் பேங்க் பேருந்து நிறுத்தம் அருகிலுள்ள சுயமரியாதைச் சுடரொளி கூ.சு.ரா திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் குறும்பை. அரு. மாசிலாமணி தலைமை வகித்தார். கீழப்பாவூர் ஒன்றிய தி.வி.க. செயலாளர் செட்டியூர் சேர்மத்துரை திப்பணம்பட்டி தங்கத்துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். தென்காசி மாவட்ட தி.வி.க. செயலாளர் பொ.பெ.சு.அன்பரசு வரவேற்புரையாற்றினார். இப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு திராவிடர் விடுதலைக்கழக பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் சிறப்புரையாற்றினர்.

அவர் தனது உரையில் இந்தியா எனும் மதச் சார்ப்பற்ற நாட்டை ஆளும் ஒன்றிய பா.ஜ.க. அரசு RSS ன் கொள்கையான சனாதனக் கொள்கையை இந்தியாவின் சட்டமாக்கிட இந்தியாவை வேத காலத்திற்கு கொண்டு சென்று வேறுபாடு நிறைந்த ஜாதி வேற்றுமை கூடிய நாடாக மாற்றத் துடிக்கிறார்கள். சனாதனக் கொள்கையை எதிர்க்கும் மாநிலமாக தமிழ்நாடு மட்டும்தான் இருக்கிறது இதற்குக் காரணம் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் மக்கள் மத்தியில் விதைத்த சமூக நீதி கொள்கையே காரணம் இந்த சமூகநீதி கொள்கையை நீர்த்து போக விடாமல் கருத்தியல் பரப்புரை செய்யும் பெரியார் இயக்கங்களும் ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி தி.மு.க. போன்ற திராவிட கட்சிகள் பாதுகாத்து வருகிறது. தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி, மருத்துவக் கட்டமைப்பு போன்றவற்றிற்கு அடித்தளமான சமூக நீதி கொள்கை இருக்கும் வரை தமிழ்நாட்டை சனாதனக் கொள்கை நெருங்க முடியாது என்பதால் பல்வேறு வழிகளில் புதிய கல்விக் கொள்கை, மும்மொழிக் கொள்கையை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த கட்டயப்படுத்துதல், பல்கலைக்கழகம் புதிய விதி முறைகள், கல்விக்கான நிதியை விடுவிக்க மறுப்பு, G.S.T. நிலுவைத் தொகை தர மறுப்பு, பேரிடர் கால நிதி தரமறுப்பு, மீண்டும் குலத் தொழிலை செய்விக்க விஷ்வகர்மா யோஷனா என பிற்போக்கு கொள்கையை ஒன்றியரசு தமிழ்நாட்டில் திணிக்க பார்க்கிறது. இதனை எதிர்க்க கல்விப் புரட்சியை -நான் முதல்வன் திட்டம் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி இன்றைய தி.மு.க.அரசு முறியடித்து வருகிறது. சனாதனம் எனும் பிரிவினைவாத பிற்போக்குக் கொள்கையை எதிர்த்திட தமிழர்கள் தயாராக வேண்டும் என தனது உரையில் குறிப்பிட்டார்.

நிகழ்வில் திராவிடர் தமிழர் கட்சி நிதிச்செயலாளர் சு.க. சங்கர், கீழப்பாவூர் வி.சி.க. மாவட்ட அமைப்பாளர் பாக்கிய ராஜ் ஆதித்தமிழர் பேரவை தென்காசி மாவட்டச் செயலாளர் கலிவரதன் கிழப்பாவூர் தி.மு.க. நகரச்செயலாளர் ஜெகதீசன் தி.வி.க. தி.மு.க. இளம்பேச்சாளர் இள. கார்த்திக், திராவிடர் கழக மாவட்டச் செயலாளர் வடகரை சண்முகம், திராவிடர் தமிழர் கட்சி பண்பொழி சேகர், ஹேமா, பெரியார் பெருந்தொண்டர் பொ.பெ.சுடலையாண்டி தமிழ்நாடு அறிவியல் மன்றம் தமிழ்செல்வன், தென்காசி அ.பாலசுப்பிரமணியன் தூத்துக்குடி சந்திரசேகர் பால் அறிவழகன், உதயக்குமார் மற்றும் தி.மு.க. திராவிடர் தமிழர் கட்சி வி.சி.க. திராவிடர் கழகம், ஆதித்தமிழர் பேரவை தி.வி.க. தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர் நிறைவாக கிழப்பாவூர் ஒன்றியத் தலைவர் அருணாபேரி ச.சுப்பையா நன்றி கூறினார்.



**முதல் பக்க தொடர்ச்சி**

பயிலரங்கத்துக்கு முன்னதாக நம்மை யெல்லாம் இயக்கமாக்கிய தோழர் பத்ரி நாராயணன் 21வது நினைவு நாளையொட்டி, 30/04/25 அன்று காலை 8:30 மணிக்கு, சென்னை மயிலாப்பூரில் உள்ள தோழரின் நினைவிடத்தில், சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி தலைமையில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. கழக தலைவர் கொளத்தூர் மணி, திமுக மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.என்.துரை, விசிக மைய சென்னை மாவட்டச் செயலாளர் சாரநாத், வழக்கறிஞர் திருமூர்த்தி, திமுக கவுன்சிலர் வே கமலா செழியன், திமுக வட்டச் செயலாளர் மோகன், அஇஅதிமுக வட்டச் செயலாளர் செல்வம் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். தோழர் வீரமணி, பத்ரி குறித்த பாடலை அவர் நினைவாகப் பாடினார்.

# சங்கராபுரத்தில் தீர்மான விளக்கக் பொதுக்கூட்டம்!




28/04/2025 திங்கள் மாலை 5 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் வட்டம் செம்பராம்பட்டு ஊரில் கழக மு.சரத்குமார் தலைமையில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளான சமத்துவ நாள் மற்றும் மயிலாடுதுறை மாநாட்டின் தீர்மான விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. இப்பொதுக்கூட்ட நிகழ்வை கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் க.இராமர் ஒருங்கிணைத்தார்.

மு.நாகராஜ், வீ.முருகன், தே.இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் துரை.தாமோதரன் மந்திரமல்ல தந்திரமே என்ற சாமியார்களின் மோசடியையும், சோதிடம் போன்ற புரட்டுகளையும், மூடநம்பிக்கையால் மக்கள் எவ்வளவு ஏமாறுகிறார்கள் என்று தன்னுடைய அறிவியல் விளக்க கலைநிகழ்ச்சி மூலம் விளக்கினார்.

தொடக்க உரை செ.வே.ராஜேஷ் நிகழ்த்தினார். கழக மாவட்ட தலைவர் க.மதியழகன், விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ.ஆ. இளையரசன், தபெதிக கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் செ. பிரபு, மக்கள் அதிகார கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் ஆ.இராமலிங்கம், CPI இவிதொச, கள்ளக்குறிச்சி மாவட்டத் தலைவர் க.முருகேசன், அறிவியல் மன்ற தலைவர் ஆசிரியர் சிவகாமி, தலைமைக் குழு உறுப்பினர் ந.அய்யனார் ஆகியோர் உரையாற்றினர்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். அக்ராபாளையம் பகுதியைச் சார்ந்த விக்னேஷ் தன்னை கழகத்தில் தலைவர் முன்னிலையில் இணைத்துக் கொண்டார்.

தலைவர் கொளத்தூர் மணி அப்பகுதியில் நிகழ்வு தொடங்குவதற்கு முன் கழகக் கொடியை ஏற்றி, சிந்தனைப் பலகையை திறந்துவைத்தார். கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

நிகழ்வில் கழக மாவட்ட அமைப்பாளர் சி.சாமிதுரை, மா.அரசு, ரா.அருள்மொழி, சி.ராசேந்திரன், க.மாரியப்பிள்ளை, கொ.பிரசாந்த், செ.ராஜகுரு, வே. கோவிந்தராஜ், ச.சுபாஷ், கி.ஆனந்தன், ரா.சதிஷ், நா.குணால், கு.குறளரசன், ச.ரோனித், ச.ராகுல், ரா.மகேஷ், இஅபிஷேக், சி. விஷ்வா ரிஷிவந்திய ஒன்றிய அமைப்பாளர் இரா.கார்மேகம், ஒன்றிய தலைவர் மா.குமார், தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் கு.பாபா, ஏ.ஜெயப்பிரகாஷ், மு.குமரேசன், இரா. துளசிராசா, மு.சுலேச்சனா, கா.பசுமதி, சா.சூர்யா, மு. இராவணன், இரா. ஜீவா, சு.வல்லரசு, திரளாக அப்பகுதி விசிக, சிபிஐ மற்றும் தபெதிக தோழர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர் நிறைவாக மு.யுவன் சங்கர்ராஜா நன்றியுரையாற்றினார்.

# மேச்சேரியில் பொதுக்கூட்டம்!

சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில்! இன ஒதுக்கல் பேசும் சங்கராச்சாரி மீது நடவடிக்கை எடுக்க கோரி மேச்சேரியில் 20.04.2025 ஞாயிறு மாலை 6.00 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது. பொதுக் கூட்டத்திற்கு சேலம் கிழக்கு மாவட்ட தலைவர் சக்திவேல் தலைமை வகித்தார்.






சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேட்டூர் டி.கே.ஆர்.இசைக் குழுவின் பறை இசை மற்றும் பகுத்தறிவுப் பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது. பெரம்பலூர் மாவட்ட செயலாளர் துரை.தாமோதரன் அவர்களின் மந்திரமா தந்திரமா நிகழ்வு மக்களிடையே வரவேற்பைப் பெற்றது.

சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சிவ சண்முகம் வரவேற்புரை ஆற்றினார். சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், திருப்பூர் மகிழவன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

நிறைவுரையாக மாநில அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி அவர்கள் கருத்துரையாற்றினார்.

இறுதியாக சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் பிரபாகரன் நன்றி கூற பொதுக்கூட்டம் நிறைவு பெற்றது.

கூட்டத்தில் சேலம் மாநகரம், சிந்தாமணியூர், இளம்பிள்ளை, நங்கவள்ளி, மேட்டூர், மேட்டூர் ஆர்எ, வனவாசி, காவலாண்டியூர், மேச்சேரி ஆகிய பகுதிகளில் இருந்து தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : May 08, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran